1993 ஏப்ரல் 7] திரு. எஸ். ஜெயக்குமார்

பிறகுதான் இந்த சிப்காட் போன்றவற்றை அமைத்தால் அங்கே தொழில்கள் நன்றாக நடைபெற ஏதுவாக இருக்கும். அந்த வகையில் நீங்கள் 'டேசிட்' என்ற அமைப்பை ஏற்படுத்தி, அடிப்படை வசதிகளைச் செய்ய வேண்டும். அதன்பிறகுதான் தொழிற்சாலை ஆரம்பிக்க வேண்டுமென்று உங்களுடைய தொலைநோக்குக் கண்ணோட்டத்துடன் இந்தத் திட்டத்தை ஆரம்பித்திருக்கிறீர்கள். அதற்காக இன்டஸ்ட்டிரியலிஸ்ட்ஸ் மற்றும் அறிஞர்கள் உங்களைப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறார்கள். அந்த வகையிலே சிப்காட் இந்த வருடம் ரிவைஸ்டு டார்கெட் என்று 52 கோடி ரூபாய் போட்டு அதன்பின் 'அச்சீவ்மென்ட்' 62 கோடி என்று அறிவித்திருக்கிறீர்கள். எதுவாக இருந்தாலும் மத்திய அரசின் முதலீடு அதிகமாக இருந்தால் தான் மாநிலத்திலுள்ள இன்டஸ்ட்ரியல் பாலிசி என்பது சக்ஸஸ் ஆகும் என்று சொல்வார்கள். அந்த வகையில் நீங்கள் மத்திய அரசை மேலும் வலியுறுத்தி இந்தத் திட்டங்களுக்கு அனுமதி பெறவேண்டுமென்று கூறி இந்த தொழில் மானியக் கோரிக்கையை மனதார வாழ்த்தி வரவேற்று விடைபெறுகிறேன்.

2. எஞ்சிய கூட்ட நாட்களுக்குப் பேரவைப் பணிகளினின்று சில உறுப்பினர்கள் தள்ளி வைக்கப்படுவதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்ற கோரிக்கை—தொடர்ச்சி.

திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் தான் பேசப் போகிறீர்களே, அப்போது சொல்லுங்கள்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு பாயின்ட் ஆஃப் ஆர்டர். இது மாண்புமிகு முதலமைச்சருடைய மானியக் கோரிக்கை. தொழில்துறை மானியக் கோரிக்கை. மிக முக்கியமான மானியக் கோரிக்கை நான் வருகிறபோது பார்த்தேன். காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். பிரதான எதிர்க்கட்சி, சட்டமன்றத்திலே பேச வாய்ப்பு இல்லாமல் உண்ணாவிரதம் இருந்து கொண்டு இருக்கிறார்கள். வெளியே ஒரு கூட்டமே கூடி வேடிக்கைப் பார்த்துக் கொண்டு இருக்கிறது. வெளியே பார்ப்பதற்கு ரொம்ப அசிங்கமாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நடந்ததெல்லாம் தெரியும், ஆனால் இங்கே நடந்தது உங்களுக்குத் தெரியாது. அப்போது நீங்கள் இல்லை. இது பாயின்ட் ஆஃப் ஆர்டர் இல்லை.

திரு. எஸ். திருநாவுக்கரசு: நான் வரும்போது பார்த்தேன். உண்ணாவிரதம் இருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவர்களை உள்ளே வர வேண்டுமென்று அழைத்து அவர்களுடைய கோரிக்கையை ஏற்று அவர்கள் உள்ளே வர அனுமதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. திருநாவுக்கரசு அவர்கள். நீங்கள் திடீரென்று வந்துவிட்டு இதைக் கிளப்புகிறீர்கள். இது பற்றிய விவாதம் காலையிலே நடந்து அதன்பின் அவர்கள் போய் இருக்கிறார்கள். நீங்கள் காலையிலே இல்லாததனாலே, நீங்கள் இப்பொழுது வந்தவுடனேயே எதையாவது கிளப்ப வேண்டுமென்று கிளப்பினால் எப்படி? உட்காருங்கள். திரு. பழனிசாமி அவர்களைக் கேளுங்கள் என்ன நடந்தது என்று. அதற்குப் பிறகு பேசுங்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை. அவர்கள் உண்ணாவிரதம் இருக்கப் போகிறோம் என்று சொல்லிவிட்டுப் போய் இருக்கிறார்கள். (குறுக்கீடு) நீங்கள் தாமதமாக வருகின்ற காரணத்தினாலே, சாவகாசமாக வந்தவுடன், நீங்கள் வந்த நேரத்தில் ஒரு 'ஜீரோ ஹவர்' கிளப்பிக் கொண்டிருப்பது சரியல்ல, (குறுக்கீடு) இப்போது வேண்டாம். (குறுக்கீடு) வேண்டாம், நீங்கள் உட்காருங்கள் (குறுக்கீடு) இது முறையல்ல. உட்காருங்கள் மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

பிற்பகல் 12.20

*மாண்புமிகு டாக்டர். இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் முக்கியமாக காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள், இந்த அவையிலே இருந்து தங்களுடைய பணிகளை முறையாகவும், சட்ட வழியாகவும், நெறியாகவும் ஆற்ற வேண்டும் என்பதுதான் எங்களுடைய எண்ணம். அவர்கள் இங்கு இருக்க வேண்டும் என்றுதான் விரும்புகிறோம். அவர்கள் வெளிநடப்பு செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்றுதான் கருதுகிறோம். அவர்கள் விவாதங்களிலே பங்கு பெற வேண்டும் என்றுதான் எண்ணுகிறோம். அவர்களாகவே எடுத்த முடிவு இங்கே இருக்க வேண்டாம் என்பது, அவர்களாகவே எடுத்த முடிவு வெளியேற வேண்டும் என்பது; அவர்களாகவே எடுத்த நடவடிக்கை உண்ணாவிரதம் என்பது; உண்ணுவதும் உண்ணாமல் இருப்பதும் அவர்கள் பொறுப்பு. அதிலே அசிங்கங்கள் ஏற்பட்டால் அவ்வ அவர்களே ஏற்படுத்திக் கொண்டதே தவிர, எங்களால்

இந்த அசிங்கங்கள் எதுவும் ஏற்படவில்லை. இப்போதும் கூறுகிறோம். அவர்களாகவே திரும்பி வரலாம். கூப்பிட்டுத் தான் வர வேண்டும் என்பதல்ல. வெளிநடப்பு செய்கிற வர்கள் திரும்பி வந்து அவையிலே உட்காருவது மரபாகவும் இருக்கிறது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர்கள் திரும்பி வர திரு. திருநாவுக்கரசு அவர்கள் அதற்கான முயற்சிகளை எடுத்து கொள்ள வேண்டும் இந்த அவை சரியாக நடத்துவதற்கு இடமும் தந்து, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் இட்ட நிபந்தனைகளை எல்லாம் நிறைவேற்றச் செய்து, அன்றைக்கு நடைபெற்ற நிகழ்ச்சிகளுக்கு வருத்தம் தெரி வித்து ஒரு நல்ல சூழ்நிலையை உருவாக்குவார்களானால், அவர்களுடைய திறமையைக் கூட நாங்கள் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. செ. கு. தமிழரசன்.

திரு. செ. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இங்கே இது பற்றி இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டு, அதற்குப் பிறகு அவர்கள் ஏதோ ஒன்றை சொல்லிவிட்டுப் போய் இருக்கி றார்கள். இப்போது நீங்கள் வந்ததும் அந்தப் பிரச்சினை யைத் திரும்பவும் கிளப்பவேண்டுமென்பதல்ல. நேரத்தை வீணாக்க வேண்டாம். (குறுக்கீடு) திரு. தமிழரசன் (குறுக்கீடு) இல்லை. அவர்கள் சொல்லிவிட்டுப் போய் இருக்கிறார்கள். அவை முன்னவர் அவர்கள் சொன்னதைப் போல அவர்கள் உண்ணாவிரதம் இருப்பதோ, உண்ணுவதோ, நாம் அதைப் பற்றிப் பொருட்படுத்த வேண்டியதில்லை. இங்கே காலையி லேயே அவர்களுக்கு வாய்ப்புகள் வழங்கி அவர்களும் பேசி, நானும் சில முடிவுகளைச் சொல்லி, அதற்குப்பிறகு அதிலே ஒரு முக்கால் மணி நேரம் போய்விட்டது, இப்போது நீங்கள் வேறு வந்து நேரத்தை எடுத்துக் கொள்ள வேண்டாம்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்களாகவே ஒரு முடிவு எடுத்துக் கொண்டால்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதுபற்றி அவை முன்னவரும் சொல்லி விட்டார். அவர்கள் வர விரும்பினால் அதைப்பற்றி ஒன்றும் இல்லை (குறுக்கீடு) இல்லை. நான் ஏற்கெனவே சொல்லிவிட்டேன். திரு. தமிழரசன்.

திரு. செ. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் மற்றும் தொழில்துறை முதலீடு பேரிலே இந்தியக் குடியரசு கட்சியின் சார்பிலே நான் சுருக்கமாக சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்த மாபெரும் தொழில்துறை ஒரு வலுவான நிர்வாகத்தின் கீழ் மிகச் சிறப்பாக நடந்துகொண்டிருக்கிறது. (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னொரு உறுப்பினர் பேச வேண்டும். நீங்கள் உங்களுடைய கருத்துக்களைச் சொல்லி விட்டீர்கள். அதைப் பற்றி அவை முன்னவர் அவர்களும் சொல்லி விட்டார்கள். (குறுக்கீடு) திரு. தமிழரசன், (குறுக்கீடு) திருநாவுக்கரசு உட்காருங்கள், வேண்டாம், வேண்டாம், வேண்டாம் (குறுக்கீடு).

திரு. செ. கு. தமிழரசன் : ஒரு மாநிலம் அனைத்து துறையிலேயும் முதலிடம் வகிக்க வேண்டும் என்றால், இந்த தொழில் துறை முன்னேறியாக வேண்டும். அந்த வகையிலே பார்த்தோமானால், இன்றைக்கு நம்முடைய தொழில்துறை இந்தியாவிலேயே முன்னணியில் இருக்கிற ஒரு தொழில் துறையாகத்தான் இயங்கி கொண்டிருக்கிறது. அதை நான் இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு குறிப்பிட விரும்புகிறேன். (குறுக்கீடு).

திரு. எஸ். திருநாவுக்கரசு : அதைப் பார்க்கவே அசிங்கமாக இருக்கிறது சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படி அசிங்கமாக இருக்க வேண்டாம் என்றால், பேரவை முன்னவர் அவர்கள் சொன்னது போல, நீங்களேகூட போய்க் கூட்டிக்கொண்டு வரலாம். இந்த மாதிரி அசிங்கம் எல்லாம் வேண்டாம் என்று சொல்லி, இப்போதே நீங்கள் போய் அழைத்துக் கொண்டு வரலாம். (குறுக்கீடு) உட்காருங்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்த வேண்டுகோளைக் காலையிலேயே சொல்லி விட்டார்கள். நீங்கள் அப்போது இல்லாததனால் இப்போது வந்து கிளப்புகிறீர்கள். வேண்டாம், உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது போன்ற பிரச்சினைகளை எழுப்ப வேண்டும் என்றால், பொதுவாக ஜீரோ ஹவரில்

தான் எழுப்ப வேண்டும். எனவே இப்படியெல்லாம் பேச வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் எழுப்ப விரும்பினால், முதலில் 11 மணிக்குள்ளாவது இந்த அவைக்கு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து வெளியில் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் உண்ணாவிரதம் இருப்பது பற்றி அவர் தெரிவித்தார். இங்கே என்னுடைய மானியக் கோரிக்கை மீதான விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் கலந்துகொள்ளக்கூடிய வாய்ப்பினை ஏற்படுத்தித்தரவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். எதிர்க்கட்சிகளைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் இந்த விவாதங்களில் பங்கு பெறவேண்டும் என்றுதான் நாங்களும் விரும்புகிறோம். இன்று அவர்கள் வெளிநடப்புச் செய்வதற்கும், உண்ணாவிரதம் இருப்பதற்கும் எந்தக் காரணமும் சொல்லிக் கொள்ளவில்லை. ஏற்கனவே வரம்பு மீறி நடந்ததற்காக சில சட்டமன்ற உறுப்பினர்கள் மீது பேரவைத் தலைவர் அவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள். அவர்கள் தங்களிடம் வருத்தம் தெரிவித்து, கடிதம் கொடுத்தால் தாங்கள் அளித்த தண்டனையை ரத்து செய்வதற்காக ஏற்கனவே அறிவித்தீர்கள். ஆனால் அவர்கள் இதை ஒரு கௌரவப் பிரச்சினையாக எடுத்துக் கொண்டு, இதில் பிரஸ்டிஜைப் பார்த்துக் கொண்டு, நாங்கள் பேரவைத் தலைவரிடம் எப்படி கடிதம் கொடுப்பது? கடிதம் கொடுக்க முடியாது என்று சொன்னார்கள். தாங்களாகவே இந்தத் தண்டனையை ரத்து செய்துவிட வேண்டுமென்று கேட்டார்கள்.

பிற்பகல் 12-25

அதை ஏற்க மறுத்ததும் அவர்கள் வெளி நடப்புச் செய்வதாக அறிவித்தார்கள். உண்ணாவிரதம் இருக்கப் போவதாகவும் அறிவித்தார்கள். அதன் பின்னர், நான் தங்களிடம் கேட்டுக்கொண்டேன், அவர்கள் கடிதம் கொடுக்கவில்லையென்றாலும், பரவாயில்லை, அவர்கள் சம்பந்தப்பட்ட நடவடிக்கை எடுக்கப்பட்ட உறுப்பினர்கள் பேரவைத் தலைவரின் அறையில் பேரவைத் தலைவர் அவர்களைச் சந்தித்து அவர்கள் நடந்து கொண்ட விதத்திற்கு வருத்தம் தெரிவித்தால் போதும், அதைப் பேரவைத் தலைவர் அவர்கள் ஏற்றுக்கொண்டு அளித்த தண்டனையை ரத்து செய்ய வேண்டுமென்று நானே கேட்டுக்கொண்டேன், அதன் பின்னரும், அவர்கள் பிடிவாதமாக உண்ணாவிரதம் இருக்கிறார்கள் என்று சொன்னால், நாங்கள் என்ன செய்யமுடியும்? எனவே மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள் இந்த அளவு

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் இந்த விவாதங்களில் பங்கு பெற வேண்டுமென்று மிகவும் ஆவலாகவும், அக்கறையாகவும் உள்ளதால், அவரே சென்று அவர்களை சமாதானப்படுத்தி, நடவடிக்கை எடுக்கப்பட்ட உறுப்பினர் களை அழைத்து வந்து, பேரவைத் தலைவரை, அவர்களின் அறையில் சந்திக்க வைத்து வருத்தம் தெரிவிக்கச் செய்தால் பின்னர் பேரவைத் தலைவர் அவர்கள் அளித்த தண்டனை யை ரத்து செய்யப் போகிறீர்கள், அவர்கள் அனைவரும் வந்து இந்த விவாதங்களில் பங்கு கொள்வதற்கு எவ்விதத் தடையும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுக்கு ஒன்றைச் சொல்லி விடுகிறேன். இதை நீங்கள் இன்னொரு 'ஜீரோ அவர்' ஆக்க வேண்டாம். நீங்கள் வருகிற நேரம் 'ஜீரோ அவர்' என்பது போலப் பேசுகிறீர்கள். (குறுக்கீடு) சரி.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நான் 11 மணிக்குள் வர வேண்டுமென்று சொன்னார்கள் நல்ல ஆலோசனை. ஆனால் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது இரண்டு வருடம் வரவேயில்லை சட்ட சபைக்கு. நாங்களாவது சட்டசபைக்கு வருகிறோம். (குறுக் கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள். இது எல்லாம் சரியில்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் வந்து இப்பொழுது எழுப்புகிற காரணத்தால்தான். (குறுக் கீடு) இல்லை, இல்லை, பிறகு இதில் நான் பேச வேண்டி வரும், உட்காருங்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் யாருக்கும் பயந்து சட்டசபைக்கு வராமல் இருக்கவில்லை என்பதை நினைவு படுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 1989 ஆம் ஆண்டு மார்ச் 25 ஆம் தேதி நான் எதிர்க் கட்சித் தலைவராக இருந்தபோது இந்த அவையில் தாக்கப்பட்டேன். அவமானப்படுத்தப்பட்டேன். என்மீது புத்தகங்களும் பேப் பர் வெயிட்களும் வீசி எறியப்பட்டன. என்மீது மிகக் கோர மான தாக்குதல் நடைபெற்றது. அன்று நான் ஒரு சபதம் எடுத்தேன். அதை அறிவித்தேன். மீண்டும் இந்த அவையில்

நுழைவது என்றால் முதலமைச்சராகத்தான் இந்த அவைக்குள் நுழைவேன் என்பதைச் சொன்னேன். (மேசையைத் தட்டும் ஒலி) அன்றைக்கு இருந்த தி.மு.க. ஆட்சி இருக்கின்றவரை இந்த அவைக்குள் நுழைய மாட்டேன் என்று சபதம் செய்தேன். என் சபதம் நிறைவேறிய பின்னர்தான் மீண்டும் இந்த அவைக்குள் வந்தேன் என்பதனை நினைவுபடுத்த விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் இப்பொழுது 'ஜீரோ அவர்' ஆக்கினதால்தான் இது வந்தது. திரு. தமிழரசன், (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மற்ற உறுப்பினர்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) இது சரியல்ல. திருநாவுக்கரசு சொன்னதும் முதலமைச்சர் அவர்கள் சொன்னதும் இரண்டும் இருப்பது அவைக் குறிப்பிலே தான் பொருத்தமாக இருக்கும். ஆகவே, உட்காருங்கள். (குறுக்கீடு) வேண்டாம். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. தமிழரசன். (குறுக்கீடு) திருநாவுக்கரசு உட்காருங்கள். (குறுக்கீடு) உட்கார வேண்டும் (குறுக்கீடு) உட்காரவில்லையென்றால் நடவடிக்கை எடுக்கவேண்டி வரும். (குறுக்கீடு) இதேபோல நீங்கள் பலமுறை 11 மணிக்கு வராமல் உங்கள் விருப்பத்திற்கு வருகிற நேரத்தில் அதை 'ஜீரோ அவர்' ஆக ஆக்குவது சரியல்ல, உட்காருங்கள். திரு. தமிழரசன். (குறுக்கீடு) உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தமிழரசனை அழைத்து இருக்கிறீர்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு பேசுவதற்கு அனுமதி இல்லையென்றாலும் அவரையும் பேச அனுமதித்திருக்கிறீர்கள். அதற்குப் பிறகு தமிழரசனை நீங்கள் பேச அழைத்திருக்கிறீர்கள். திரு திருநாவுக்கரசு. அவர்களை அமர சொல்கிறீர்கள் ஆனால் அமராமல் அவர் பேசிக் கொண்டிருப்பது, எப்படியாவது நம்மை.... (குறுக்கீடு) திருநாவுக்கரசு அவர்கள் தன்னையும் பேரவைத் தலைவர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற அளவுக்குதான் அவர்கள் எண்ணி பேசிக்கொண்டிருக்கிறார்களேயொழிய, இதிலே அவர்கள் அமைதியாக அமரவேண்டுமென்ற உணர்வு இல்லாமல் பேரவைத் தலைவர் தன்னையும் இன்றைக்கு அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற உணர்வோடு பேசிக் கொண்டிருக்கும்போது பேரவைத் தலைவருடைய உத்தரவுக்கு அவர் எப்படிக் கீழ்படிவார் என்பது எனக்குத் தெரியவில்லை (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. திருநாவுக்கரசு உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை உட்கார வேண்டும். (குறுக்கீடு) நீங்கள் கேட்டு, அதற்குப் பதில் பெற்று விட்டீர்கள். அதற்குப் பிறகு வேண்டாம். திரு. தமிழரசன்

திரு. எஸ். திருநாவுக்கரசு : ஒரு வேண்டுகோள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வேண்டுகோள் எல்லாம் நீங்கள் வைத்து உங்களுடைய வேண்டுகோளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். மேற்கொண்டு ஒரு தகவல் சொன்னீர்கள். அதற்கும் முதலமைச்சர் சரியான பதிலை உங்களுக்குத் தந்துவிட்டார்கள். மேற்கொண்டு இதிலே வேண்டாம். வருவாய்த்துறை அமைச்சரவர்கள் சொன்னதைப்போல நம் மீதும் ஏதாவது நடவடிக்கை எடுக்கட்டும் என்பதற்காகவே எழுந்து நிற்கிறீர்கள் என்றுதான் பொருள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

பிற்பகல் 12—30.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று காலையிலே இருந்து இந்தப் பிரச்சினை பலவாறாக விவாதிக்கப்பட்டிருக்கிறது. இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த நேரத்திலே இருந்திருந்தால், அந்த விவாதத்தில் அவர்களும் கலந்து கொண்டு இருந்திருப்பார். (குறுக்கீடு) அதைத்தான் சொல்கிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது அப்போதே முடிந்து விட்டது. நீங்கள் இங்கே வரும்போது பிரச்சினையைச் சொல்லக் கூடாது. அப்போதே அவர்கள் இங்கே சொல்லிவிட்டுப் போயிருக்கிறார்கள். திரு திருநாவுக்கரசு அவர்களே. நீங்கள் உங்கள் விருப்பத்திற்குப் பேசக்கூடாது. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, ஜீரோ அவரிலே யார் இருந்தார்களோ அவர்களெல்லாம் கலந்து கொண்டார்கள். இப்போது நமக்கு இருக்கும் பிரச்சினை, ஏற்கெனவே இரண்டு நாட்கள் நீங்கள் மாலையிலே நிகழ்ச்சியை நடத்த இருக்கிறீர்கள். இப்போது இதேபோல் ஜீரோ அவர் இல்லாமல், இன்னொரு ஜீரோ அவரை உருவாக்கி, உருவாக்கி காலத்தை தள்ளிக்கொண்டே போனால் சரியாக இருக்காது. அதோடு அவர் சொல்ல வேண்டிய கருத்தை இங்கே சொன்னார்

அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார். நீங்களும் சொல்லியிருக்கிறீர்கள். அதற்கு மேலும் அவர் வேண்டுகோள், வேண்டுகோஸ் என்றால் எப்படி? அவருக்கு இப்போது வேண்டுகோள் வைத்திருக்கிறோம். அந்த வேண்டுகோளை முடிந்தால் அவர் நிறைவேற்றுவது நன்றாக இருக்கும் (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு திருநாவுக்கரசு, உட்காருங்கள். இப்போதே மணி 12–30. (குறுக்கீடு) மற்ற எல்லா உறுப்பினர்களும் பேச வேண்டியிருக்கிறது. (குறுக்கீடு) உட்காருங்கள். திரு. செ. கு. தமிழரசன். (குறுக்கீடு).

திரு. செ. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசுகின்றபோது இன்னொரு உறுப்பினர் தொடர்ந்து பேசிக் கொண்டிருப்பது என்னுடைய உரிமையைப் பாதிக்கிற ஒரு மிகப் பெரிய செயலாக இருப்பதால் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவரை மறித்துக் கொண்டு பேசிக் கொண்டிருப்பது நல்லதல்ல. திரு. தமிழரசன் பேசுவதற்குக் குறுக்கீடு செய்துகொண்டு, அந்த உறுப்பினரைப் பேசவிடாமல் தடை செய்வது என்பது, இன்னொரு உறுப்பினருடைய உரிமையை நீங்கள் மறுக்கிறீர்கள் என்றுதான் பொருள்படும். எனவே நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். (குறுக்கீடு) திருநாவுக்கரசு நீங்கள் உட்காரவில்லை என்று சொன்னால் நடவடிக்கை எடுக்க வேண்டிவரும். (குறுக்கீடு) இதற்குமேல் உங்களுக்கு அனுமதியில்லை. (குறுக்கீடு) நடவடிக்கை எடுக்கவேண்டி வரும்.

(திரு. எஸ். திருநாவுக்கரசு வெளி நடப்புச் செய்தார்.)

6. மானியக் கோரிக்கைகள் 1993—94—விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

திரு. செ.கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்துறை மானியக் கோரிக்கையின் பேரில் இந்தியக் குடியரசுக் கட்சியின் சார்பிலே பேசுவதற்கு வாய்ப்புத்